**கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டம் - கூறு- பீ - 2013**

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டம் - கூறு- பீ இன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 யூன் 07 ஆந் திகதிய 2626- எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 (அ) ஆம் பிரிவு மற்றும் 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 0246 – எஸ்ஆர்ஜ ஆம் மானிய உடன்படிக்கையின் IV ஆம் என்பவற்றுடன் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவு சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன

கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மின்சாரசபை (சீஈபீ) ஊடாக மின்சக்தி மற்றும் வலு அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்&டிபி) ஊடாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தரக்காப்பீட்டுப் பிரிவு (பிசீகியூஏயூ) என்பன செயற்திட்டத்தின் கூறு ‘‘பீ’’ இன் அமுலாக்கல் முகவர்களாகும். அடிப்படை பயன்பாடுகளை மீளமைப்பதன் மூலம் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் மற்றும் சட்டசேவைகள் என்பவற்றினை மீளமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் ஆக்கக்கூறு ‘‘பீ’’ இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 29.49 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 26.29 மில்லியன் அல்லது 89 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் சிவில் வேலைகளிற்காக ஐ.அ.டொலர் 1.50 மில்லியன் வழங்குகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 யூன் 07 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2014 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள

தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் ஆகியோரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(ஏ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போதான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள்நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,119,279,544 ஆன செலவினத்துடன் ஒப்பிடும் போது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 980,819,419 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 2,353,395,973 ஆகும். மீளாய்வாண்டிற்கான, முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்று காட்டுகின்றன.

| விபரம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் - நீர் வழங்கல் சபை –கடன் | 323,106,845 | 233,427,326 | 633,185,625 |

| | | | |
|---|---|---|---|
| நீர் வழங்கல் சபை –மானியம் | 24,103,981 | 178,185,515 | 202,289,496 |
| இலங்கை மின்சாரசபை | 551,574,464 | 663,592,082 | 1,354,337,998 |
| உபகரணங்கள் - நீர் வழங்கல் சபை – கடன் | 26,154,860 | - | 26,154,860 |
| - நீர் வழங்கல் சபை – மானியம் | 14,743,423 | - | 14,743,422 |
| ஆலோசனை – நீர் வழங்கல் சபை | 257,556 | 1,247,914 | 6,544,433 |
| அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் | | | |
| நீர் வழங்கல் சபை | 13,587,503 | 13,258,635 | 31,260,574 |
| பிசிகியூஏயூ | 14,447,766 | 16,138,361 | 43,793,833 |
| உபகரணங்கள் –பிசிகியூஏயூ | 4,181,498 | 2,985,669 | 9,046,691 |
| அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம்- | | | |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் | 3,066,371 | 5,262,084 | 20,330,171 |
| வட்டி | 5,595,152 | 5,181,958 | 11,708,870 |
| | ---------------- | ----------------- | ------------------ |
| மொத்தம் | 980,819,419 | 1,119,279,544 | 2,353,395,973 |
| | ========== | ========== | =========== |

**4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு**

---------------------------------------

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முதலாவது உருவாக்கல் கட்டுநிதி நிதியக் கணக்கின் செயற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | **கடன்** | | **மானியம்** | |
|---|---|---|---|---|
| | -------- | | --------- | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| 2013 சனவரி 31 இல் உள்ளவாறான மீதி | 495,699 | 63,033,528 | 21,133 | 2,687,290 |
| கூட்டு: வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் | - | - | - | 7,205 |
| | ---------- | -------------- | ---------- | -------------- |
| | 495,699 | 63,033,528 | 21,133 | 2,694,495 |
| கழி: பற்றுதல்கள் - பிசீகியூஏயு | 82,139 | 10,548,419 | - | |

| | | | | |
|---|---|---|---|---|
| - நீர் வழங்கல் சபை | 407,567 | 51,674,588 | 20,963 | 2,672,294 |
| - மீளளிப்பு | - | - | 170 | 22,201 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | 26,846 | - | - |
| | ----------- | -------------- | --------- | ------------ |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 5,993 | 783,675 | - | |
| | ====== | ======== | ===== | ======= |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1. கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அவற்றின் மீதுள்ள முக்கியமான கணக்கீட்டுக் குறைபாடுகள் காரணமாக அவை நிராகரிக்கப்பட்டு 2013 ஏப்ரல் 01 கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும்,ரூபா 189,748,579 கூட்டுமொத்தத் தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகளை திருத்துவதன் மூலம் திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 30 இலேயே மீளச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் மீதான வெளிநாட்டு நாணயமாற்று மீதான இலாபம் இரண்டு சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்பட்ட தவறான நாணயமாற்று வீதங்கள் காரணமாக ரூபா 1,920,224 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2011 ஆகஸ்ட் 21 இல் கைசாத்திடப்பட்ட கூட்டு நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கங்கள் (ஐஎவ்ஆர்சீ) என்பவற்றால் பெறப்பட்ட ரூபா 196.13 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5 மில்லியன் மானியங்களின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறையில் நீர் வழங்கல் திட்டம் மேற்கொள்வதற்கான வேலைகளை நிர்வகிப்பதற்கு உடன்பட்டிருந்தது. 2013 செப்தெம்பர் 30 இல் மானியம் மூடப்பட்டிருந்த போதிலும் ரூபா 182,791,412 இற்கு சமமான ஐ.அ.டொலர் 1,403,054 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்வழங்கல் திட்டத்தின் எந்திரவியல், மின்னியல் அறிவுறுத்தல் வேலைகள் என்பவற்றில் ரூபா 7,633,247 இற்கு சமமான ஐ.அ.டொலர் 58,984 தொகையான 2013 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு செய்யப்பட்ட வேலைகளின் கிரயம் மீளெடுப்புகளிற்கான விண்ணப்பங்களை முன்னளிப்பதிலுள்ள தாமதம் காரணமாக மீளளிக்க முடியாதிருந்தது. சொல்லப்பட்ட நீர்வழங்கல் திட்டம் தொடர்பில் ரூபா 14,973,069 இற்கு சமமான ஐ.அ.டொலர் 114,252 இற்கான இன்னொரு மூன்று மீளெடுப்பு விண்ணப்பங்கள் ஐஎவ்ஆர்சீ மானியத்திற்கு பதிலாக ஆசிய அபிவிருத்தி வங்கி கடனிலிருந்து மீளளிக்கப்பட்டிருந்தது.

(ii) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்காக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மானிய பெறுகைகளின் கீழ் ரூபா 12,499,892 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,563,984 தொகையான இலங்கை அரசாங்க பங்களிப்பு மானியத்திற்கு பதிலாக கடன் பெறுகைகளாக கருதப்பட்டிருந்தது. ஆகவே, கடனின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள்

அதிகரித்துக் காட்டப்பட்டிருந்த அதேநேரம் அந்த மானியம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மானிய பொறுகைகளில் மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 30,243,783 தொகையான செலவினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த ஒதுக்கீட்டு கணக்கில் காட்டப்பட்ட ரூபா 37,877,030 தொகையான செலவினத்துடன் உடன்பட்டிருக்கவில்லை.

(iv) மீளாய்வாண்டு இறுதியில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டிய ரூபா 324,761 ஆன அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவாக, கூறு ''பீ'' இன் அதிகரிக்கும் செயற்பாட்டுக் கிரயத்தின் பெறுமதி அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

**5.3. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், கூறு ''பீ'' இன் கொடுக்கல் வாங்கல்களில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. நிதி மற்றும் செயலாற்றல் மீளாய்வு**

**6.1 நிதிகளின் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போதான பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையின் படி நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | மீளாய்வாண்டின் போது பயன்படுத்திய தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.மொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ.மொலர் மில் | ரூபா மில் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி- கடன் | 26.29 | 3,437.42 | 922.0 | 0.49 | 906.18 | 15.88 | 2,064.44 |
| மானியம் | 1.50 | 196.13 | 106.0 | 0.021 | 37.87 | 1.4 | 182.79 |
| இலங்கை அரசாங்கம் | 3.38 | 442.59 | 45.5 | - | 36.77 | - | 106.16 |
| மொத்தம் | 31.17 | 4,076.14 | 1,073.5 | 0.511 | 980.82 | 17.28 | 2,353.39 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) ரூபா 2,558,166 இற்கு சமமான ஐ.அ.டொலர் 20,140.61 பெறுமதியான மீளளிப்பு விண்ணப்பங்கள் அனுமதிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கோரிக்கைகளின்

பிரதிகள் போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக மீளாய்வாண்டின் போது பிடித்துவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) கடனின் ரூபா 3,855.79 மில்லியன் மற்றும் மானியத்தின் ரூபா 220.35 மில்லியன் என்பவற்றின் முறையே 55.4 சதவீதம் மற்றும் 98.49 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 2,136.36 மில்லியன் தொகையான கடன் மற்றும் ரூபா 217.03 மில்லியன் தொகையான மானியம் என்பவற்றின் பெறுகைகள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், கடன் மற்றும் மானியத்தின் பெறுகைகள் மீதான பயன்படுத்தல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விபரம்** | **மதிப்பிடப்பட்ட செலவினம் (மீளஒதுக்கப்பட்டது)** | | **2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** | **மொத்த ஏற்பாட்டின் சதவீதமாக திரண்ட செலவினம்** |
|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| முதலீட்டுக் கிரயங்கள் | | | | |
| சிவில் வேலைகள்- சீஈபீ | 15.47 | 2,022.70 | 1,354.34 | 66.96 |
| என்டபிள்யூஎஸ்&டிபீ | 9.66 | 1,263.04 | 633.19 | 50.13 |
| உபகரணம் | 2.34 | 305.95 | 26.15 | 8.55 |
| ஆலோசனை- வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை | 0.08 | 10.46 | 6.54 | 62.52 |
| மீண்டெழும் கிரயம் அதிகரித்தல் - என்டபிள்யூஎஸ்&டிபீ | 0.45 | 58.83 | 31.26 | 53.13 |
| செயற்திட்ட முகாமைத்துவம்- பிசீகியூஏயூ | 1.12 | 146.44 | 52.84 | 36.08 |
| வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணம் | 0.37 | 48.38 | 32.04 | 66.23 |
| உப மொத்தம் | 29.49 | 3,855.80 | 2,136.36 | 55.40 |
| சிவில் வேலைகள் - மானியம் | 1.68 | 220.35 | 217.03 | 98.49 |
| முழு மொத்தம் | 31.17 | 4,076.14 | 2,353.39 | 57.73 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டத்தின் கூறு ''பீ'' 2014 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலப்பகுதியின் 80 சதவீதத்திற்கு மேல் கடந்திருந்த பின்னர் அனுமதிக்கப்பட்ட கடனின் 55.4 சதவீதம் மாத்திரம் கூறு பீ பயன்படுத்தியிருந்தது.

(ஆ) இலங்கை மின்சார சபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பவற்றின் சிவில் வேலைகளிற்காக ரூபா 3,285.74 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,987.53 மில்லியன் தொகை அல்லது மொத்த ஏற்பாட்டின் 60.48 சதவீதம் மாத்திரம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நிர்வாக கைநூலின் ஒட்டுமொத்த அமுலாக்கல் திட்டத்தின் அட்டவணை பீ இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம், ஏற்கனவே சகல அதிகாரங்கள் மற்றும் நீர் வழங்கல் நடவடிக்கைகள் 2013 மார்ச் மாதம் இறுதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.